## SET 3

1. ‘கையருகே நிலா’ என்னும் நூலை எழுதிய அறிவியலாளர்

   (A) சர்.சி.வி. ராமன்

   (B) அருணன் சுப்பையா

   (C) வளர்மதி

   (D) மயில்சாமி அண்ணாதுரை

2. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

   (A) சங்கு — சேமங்கலம்

   (B) சாலரா — பாண்டில்

   (C) பறை — பாணி

   (D) திமிலை — எக்காளம்

3. “ரவியின் கோடானுகோடி விரல்களின் அழைப்பிற்கு இணங்கி எப்படி உடலை நெளித்து, நீட்டி, வளைத்து வருகிறது” — இதில் விரல்கள் எனப்படுபவை

   (A) வேர்கள்

   (B) தானியக் கதிர்கள்

   (C) ஒளிக்கதிர்கள்

   (D) கமுகு மரம்

4. நடுத்திராவிட மொழிகளுள் சேராதவற்றைத் தேர்க

   தெலுங்கு, பர்ஜி, தோடா, கதபா, கொரகா

   (A) தோடா, பர்ஜி

   (B) தெலுங்கு, கதபா

   (C) தோடா, கொரகா

   (D) பர்ஜி, தெலுங்கு

5. பாரதிதாசனின் படைப்பு அல்லாததைச் சுட்டுக.

   (A) பாண்டியன் பரிசு

   (B) பிசிராந்தையார்

   (C) குடும்ப விளக்கு

   (D) கண்ணன் பாட்டு

6. “கலம் தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரை சேர்க்குந்து”
என்று கூறுவது

(A) அகநானூறு

(B) புறநானூறு

(C) ஐங்குறுநூறு

(D) பதிற்றுப்பத்து

7. வீரமாமுனிவரின் எளிமையையும், துறவையும் கண்டு வியந்து, ‘இஸ்மத் சன்னியாசி’ என்னும் பட்டத்தை வழங்கியவர்

(A) ஹீராஸ் பாதிரியார்

(B) ஹோக்கன்

(C) பிரான்சிஸ் எல்லிஸ்

(D) சந்தாசாகிப்

8. ஐ.நா. அவையில் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர்

(A) சுதா ரகுநாதன்

(B) எம்.எஸ். சுப்புலட்சுமி

(C) எம்.எல். வசந்தகுமாரி

(D) கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்

9. தாள், தண்டு, கோல், தூறு, கழி முதலிய தமிழ்ச்சொற்கள் குறிப்பது

(A) தாவரங்களின் கிளைப்பகுதி

(B) இலைகளின் பெயர்கள்

(C) தாவரங்களின் அடிப்பகுதி

(D) தாவரங்களின் காய்ந்த பகுதி

10. சாகித்திய அகாதெமி விருது பெறாத கவிஞர்

(A) ஈரோடு தமிழன்பன்

(B) மு. மேத்தா

(C) பாரதிதாசன்

(D) ந. பிச்சமூர்த்தி

11. ‘குறம் என்றும் பள்ளு என்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு உறவு என்று மூன்று இனத்தும் உண்டோ’ — இப்பாடலடிகள் இடம் பெறுவது

(A) புதுக்கவிதைகள்

(B) சிற்றிலக்கியங்கள்

(C) நீதி நூல்கள்

(D) தனிப்பாடல்கள்

12. ‘காவல் உழவர் களத்து அகத்துப் போர் ஏறி நாவலோஓ என்றிசைக்கும் நாளோதை’ — இப்பாடல் அடிகள் உணர்த்தும் சிறப்புக்கு உரிய மன்னன்

(A) சேர மன்னன்

(B) பாண்டிய மன்னன்

(C) சோழ மன்னன்

(D) பல்லவ மன்னன்

13. கீழ்க்கண்ட சிறப்புப் பெயர்களில் வாணிதாசனுக்குக் குறிப்பிடாதது

(A) பாவலரேறு

(B) தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த்

(C) கவிஞரேறு

(D) பாவலர் மணி

14. ‘மாளாத’ என்பதன் பொருள்

(A) மறைக்காத

(B) தேடாத

(C) திகட்டாத

(D) தீராத

15. சரியான கூற்று / கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

கூற்று 1 : உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம், வசன கவிதை எனப்படும்.

கூற்று 2 : வசன கவிதை வடிவத்தைத் தமிழில் அறிமுகப்படுத்தியவர் பாரதிதாசன் ஆவார்.

(A) கூற்று 2 மட்டும் சரி

(B) கூற்று 1 மட்டும் சரி

(C) கூற்று 1 மற்றும் 2 சரி

(D) ஏதுமில்லை

16. சோழ மன்னனின் ஆணைச் சக்கரமாகச் சிலப்பதிகாரம் சுட்டுவது

(A) இமயமலை

(B) கதிரவன்

(C) கடல்

(D) மழை

17. கருப்புநிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்

(A) கம்பு

(B) சோளம்

(C) அரிசி

(D) உளுந்து

18. கீழ்க்கண்ட கூற்று/கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

கூற்று 1 : நீர் நிலைகளை உருவாக்குபவர்களை உயிரை உருவாக்குபவர்கள் என்று போற்றினர்.

கூற்று 2 : அகத்திணை, புறத்திணை ஆகியவற்றிற்கான பொதுவான செய்திகளைக் கூறுவது பொதுவியல் திணையாகும்.

கூற்று 3 : உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும்.

(A) கூற்று 1, 2 மற்றும் 3 தவறு

(B) கூற்று 1 மற்றும் 2 சரி, 3 தவறு

(C) கூற்று 1 மற்றும் 3 சரி, 2 தவறு

(D) கூற்று 1, 2 மற்றும் 3 சரி

19. கீழ்க்கண்ட கூற்று/கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

கூற்று 1 : மூதுரை சிறந்த அறிவுரைகளைக் கூறும் நூல்

கூற்று 2 : மூதுரை நூலில் முப்பத்தாறு பாடல்கள் உள்ளன

(A) கூற்று 1 மற்றும் 2 சரி

(B) கூற்று 1 மற்றும் 2 தவறு

(C) கூற்று 1 மட்டும் சரி

(D) கூற்று 2 மட்டும் சரி

20. பலரோடு பகை மேற்கொள்வதைக் காட்டிலும் பல மடங்கு தீமையைத் தருவது

(A) ஒழுக்கத்தைக் கைவிடல்

(B) நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடல்

(C) வாய்மையைக் கைவிடல்

(D) முயற்சியைக் கைவிடல்

21. குருதி கற்கள் குத்தி பருக்கை கொப்பளித்தது காலை – சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

(A) கற்கள் குத்தி பருக்கை குருதி காலை கொப்பளித்தது

(B) பருக்கை கற்கள் காலை குத்தி குருதி கொப்பளித்தது

(C) கற்கள் காலை குத்தி பருக்கை கொப்பளித்தது குருதி

(D) குருதி கொப்பளித்தது பருக்கை குத்தி காலை கற்கள்

22. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்

பேணித் தமராக் கொளல் — இக்குறட்பாவில் இடம்பெற்றுள்ள சீர் எதுகைச் சொற்களாவன

(A) எல்லாம், அரிதே

(B) பேணித், தமராக்

(C) அரியவற்றுள், அரிதே

(D) பெரியாரைப் பேணி

23. 'கிளர்ந்தெழுந்தது' — என்பதன் வேர்ச்சொல்

(A) கிளர்ந்த

(B) கிளர்ந்து

(C) கிளர்

(D) கிளர்ச்சி

24. 'வனை' என்பதன் வினையெச்சம்

(A) வனைந்த

(B) வனைதல்

(C) வனைந்து

(D) வனைந்தவர்

25. வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபு. இவ்விடைக்குப் பொருந்தாத வினாத் தொடரை எழுதுக.

(A) வறுமையும் செல்வமும் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(B) வறுமையை எப்படிக் கூறுவது தமிழர் மரபு?

(C) தமிழ் மரபில் மருந்து என்று கூறப்படுவது எது?

(D) தமிழ் மரபில் பிணி என்றும் மருந்து என்றும் கூறுவது எவற்றை?

26. சதுரகராதியை ஆக்கியவர்

(A) தொல்காப்பியர்

(B) வீரமாமுனிவர்

(C) பவநந்தி முனிவர்

(D) அகத்திய முனிவர்

27. 'தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்' — என்பது

(A) செயப்பாட்டு வினைத்தொடர்

(B) செய்வினைத் தொடர்

(C) பிறவினை

(D) தன்வினை

28. அமரிடை ஆனை ஆயிரம் மாணவனுக்கு பரணி வகுப்பது வென்ற — சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடராக்குக.

(A) அமரிடை வென்ற ஆனை ஆயிரம் மாணவனுக்கு பரணி வகுப்பது

(B) ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி

(C) அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி ஆயிரம் ஆனை

(D) ஆனை ஆயிரம் மாணவனுக்கு அமரிடை வென்ற வகுப்பது பரணி

29. 'பைங்கூழ்' என்பதன் இலக்கணக் குறிப்பு

(A) அடுக்குத்தொடர்

(B) செய்யுளிசை அளபெடை

(C) பண்புத்தொகை

(D) வினைத்தொகை

30. ‘அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்.....’ என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

(A) திருக்கோவையார்

(B) திருவாசகம்

(C) திருவாய்மொழி

(D) திருப்பாவை

31. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கல்மேல் எழுத்து போல | 1. | எழிலனும் இனியனும் எப்போதும் சண்டையிட்டுக் கொள்வர் |
| (b) | மழை காணாப் பயிர் போல | 2. | புதுப்புது துறைகள், வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ளாதவர்கள் முன்னேறமாட்டார்கள் |
| (c) | கிணற்றுத் தவளை போல | 3. | மேய்ச்சலுக்குச் சென்ற தாய்ப்பசு மாலை வரை திரும்பாததால் கன்று துன்புற்றது |
| (d) | கீரியும் பாம்பும் போல | 4. | இளமையில் கற்பது அழியாது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

32. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | திருக்குறள் | 1. | பெருங்கலி வங்கம் |
| (b) | புறநானூறு | 2. | நாவாய் |
| (c) | அகநானூறு | 3. | கழித்தோணி |
| (d) | பதிற்றுப்பத்து | 4. | உருகெழு வங்கம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

33. பொருத்துக:

(a) நாற்று — 1. வாழையின் இளநிலை

(b) மடலி — 2. தென்னையின் இளநிலை

(c) குருத்து — 3. நெல், கத்தரியின் இளநிலை

(d) பிள்ளை — 4. பனையின் இளநிலை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

34. பொருத்துக:

(a) மூணு — 1. தெலுங்கு

(b) மூஜி — 2. கன்னடம்

(c) மூடு — 3. மலையாளம்

(d) மூரு — 4. துளு

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

35. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கரும்பு | 1. | கழை |
| (b) | மூங்கில் | 2. | கோல் |
| (c) | மிளகாய்ச் செடி | 3. | தட்டு |
| (d) | சோளம் | 4. | கழி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

36. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வெள்ளிப்பனிமலையின் மீது உலவுவோம் | 1. | பாரதிதாசன் |
| (b) | கற்பது பெண்களுக்கு ஆபரணம் | 2. | பாரதியார் |
| (c) | துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிட வேணும் | 3. | மருதகாசி |
| (d) | ஏர்முனைக்கு நேரிங்கே எதுவுமே இல்ல | 4. | பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

37. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | உமணர் போகலும் | 1. | அகநானூறு |
| (b) | பாலொடு வந்து கூழொடு பெயரும் | 2. | பட்டினப்பாலை |
| (c) | பொன்னொடு வந்து கறியொடு பெயரும் | 3. | நற்றிணை |
| (d) | கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைபடாது | 4. | குறுந்தொகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

38. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப் பாணன் சூடான் பாடினி அணியாள் | 1. | பெரியபுராணம் |
| (b) | தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார் | 2. | புறநானூறு |
| (c) | வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி | 3. | திருப்பாவை |
| (d) | சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் | 4. | தேவாரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

39. பொருத்துக:

| | | |
|---|---|---|
| (a) | அள்ளல் | 1. சங்கு |
| (b) | வெரீஇ | 2. அஞ்சி |
| (c) | நந்து | 3. சேறு |
| (d) | பார்ப்பு | 4. குஞ்சு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

40. பொருத்துக:

| | | |
|---|---|---|
| (a) | கடியவாயின | 1. வரைவேய் |
| (b) | கொடியவாயின | 2. நெடுவரை |
| (c) | பொய்யுடையன | 3. காவுகள் |
| (d) | மையுடையன | 4. மாமலர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

41. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | நீலகேசி | 1. | பௌத்த சமயம் |
| (b) | மணிமேகலை | 2. | வைணவ சமயம் |
| (c) | கம்பராமாயணம் | 3. | சமயச் சார்பற்றது |
| (d) | திருக்குறள் | 4. | சமண சமயம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

42. பொருத்தமான விடையைத் தேர்க:

| | | | |
|---|---|---|---|
| (a) | சிறுபஞ்சமூலம் | 1. | காப்பிய இலக்கியம் |
| (b) | குடும்ப விளக்கு | 2. | சங்க இலக்கியம் |
| (c) | சீவக சிந்தாமணி | 3. | அற இலக்கியம் |
| (d) | குறுந்தொகை | 4. | தற்கால இலக்கியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

43. சொல்லையும் பொருளையும் பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | ஊழி | 1. | சிறப்பு |
| (b) | ஊழ் | 2. | வானம் |
| (c) | பீடு | 3. | யுகம் |
| (d) | விசும்பு | 4. | முறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

44. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | மூடுபனி | 1. | பெயரெச்சம் |
| (b) | துஞ்சிய | 2. | முற்றெச்சம் |
| (c) | வாழியர் | 3. | வினைத்தொகை |
| (d) | எடுத்தனன் உண்டான் | 4. | வியங்கோள் வினைமுற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

45. பொருத்துக:

(a) ஊதியம் — 1. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

(b) அன்பு — 2. இடவாகு பெயர்

(c) பேறு — 3. பண்புப் பெயர்

(d) உலகம் மகிழ்ந்தது — 4. பொருட் பெயர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

46. பொருத்துக:

(a) Classical Literature — 1. வட்டார இலக்கியம்

(b) Epic Literature — 2. செவ்விலக்கியம்

(c) Devotional Literature — 3. காப்பிய இலக்கியம்

(d) Regional Literature — 4. பக்தி இலக்கியம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

47. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | PASSWORD | 1. | சட்ட ஆவணம் |
| (b) | PASSPORT | 2. | கடவுச் சீட்டு |
| (c) | VISA | 3. | கடவுச் சொல் |
| (d) | WRITS | 4. | நுழைவு இசைவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

48. பிறமொழிச் சொல்லுக்கான தமிழ்ச் சொல்லைப் பொருத்தி எழுதுக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சாப்போ | 1. | நாவாய் |
| (b) | நேவி | 2. | பா |
| (c) | பாய்யியோனா | 3. | துன்பப் பாடல் |
| (d) | இளிகியா | 4. | வெண்பா பாடல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

49. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | கார் அறுத்தான் | 1. | பண்பாகு பெயர் |
| (b) | மஞ்சள் பூசினாள் | 2. | காலவாகு பெயர் |
| (c) | வற்றல் தின்றான் | 3. | கருவியாகு பெயர் |
| (d) | வீணை கேட்டாள் | 4. | தொழிலாகு பெயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

50. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (a) | நேமி | 1. | தோள் |
| (b) | கோடு | 2. | மலை |
| (c) | விரிச்சி | 3. | சக்கரம் |
| (d) | சுவல் | 4. | நற்சொல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 1 | 3 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

FOR ROUGH WORK